

# நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

## மானியக் கோரிக்கை எண் : 34

## அறிவிப்புகள்

## 2013 - 2014

## 14. 2013–14ஆம் ஆண்டில் கூடுதல் குடிநீர் வழங்கப்படவுள்ள ஊரகக் குடியிருப்புகள்

ஊரகப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 55 லிட்டர் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க வேண்டுமென்ற நோக்கத்துடன் 2013–14ஆம் ஆண்டில் முதற்கட்டமாக 6000 ஊரக குடியிருப்புகளில் குடிநீர் திட்டங்களை செயல்படுத்த **மாண்மிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.**

அதன்படி 4,417 தனி மின்விசைத் திட்டங்கள், 195 குடிநீர் தரம் பாதிக்கப்பட்ட குடியிருப்புகளுக்கான திட்டங்கள் மற்றும் 1,388 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டங்கள் குறைந்தபட்ச தேவை திட்டம்/தேசிய ஊரக குடிநீர் வழங்கல் திட்டம் ஆகியவற்றின் நிதியுதவி யுடன் ரூபாய் 1190.72 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

## 15. கூட்டுக் குடிநீர் திட்டங்களில் புனரமைப்புப் பணிகள்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் 538 கூட்டுக் குடிநீர் திட்டங்களை பராமரித்து வருகின்றது. இவற்றில் நீண்டகால பயன்பாட்டில் உள்ள கூட்டுக்குடிநீர் திட்டங்களில் பயனாளிகளுக்கு வடிவமைக்கப்பட்ட அளவு குடிநீர் வழங்க இயலாத நிலையை சீர்செய்ய புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ள **மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.**

அதன்படி, நீர் ஆதாரங்களை மேம்படுத்துதல், நீருந்து நிலையங்கள் அமைத்தல், தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல், நீண்டகால பயன்பாட்டில் உள்ள மின் மோட்டார் மாற்றும் பணிகள், சேதமைடந்த காற்று தடுக்கிதழ்களை **(Air Valves)**, மாற்றி அமைத்தல், பழுதடைந்த நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு பதிலாக புதிய நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டுதல், சாலைகளை அகலப்படுத்தும்போது சேதமடைந்த குழாய்களை மாற்றி அமைக்கும் பணிகள், தனி மின்பகிர்மான பாதை, நீர் அழுத்த பாதுகாப்பு அமைப்பு மற்றும் குடிநீர் அளவு மானி பொருத்துதல் போன்ற புனரமைப்புப் பணிகள், குறைந்தபட்சத் தேவைத் திட்டம்/தேசிய ஊரக குடிநீர்த் திட்டம் ஆகியவற்றின் நிதியுதவியுடன் 233 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களில் ரூபாய் 58.44 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

## 16. 2013–14ஆம் ஆண்டில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ள கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள்

மாநிலத்தின் கடலோரப் பகுதிகள், குடிநீரின் தரம் பாதிக்கப்பட்ட பகுதிகள், மற்றும் குடிநீர் பற்றாக்குறை உள்ள பகுதிகளுக்காக, நீடித்த நிலைத்த தன்மையுடன் கூடிய ஆறுகள், அணைக்கட்டுகள் மற்றும் நீர்த் தேக்கங்களை நீராதாரமாகக் கொண்டு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க வேண்டும் என்பது இந்த அரசின் நோக்கமாகும்.

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி**, 2013–14ஆம் நிதியாண்டில், கடலூர், நீலகிரி, ஈரோடு, திருப்பூர், தேனி, சிவகங்கை மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் அமைந்துள்ள பத்மநாபபுரம் நகராட்சி, 14 பேரூராட்சிகள் மற்றும் 3,005 ஊரகக் குடியிருப்புகளிலுள்ள 10.66 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் 8 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்கான ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**கே.பி.முனுசாமி**
நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம்,
நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை